Registerd as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (21-4-66) இதழ் 73

பராபவ சித்திரை 8 துல்ஹஜ் பிறை 29 வியாழக்கிழமை

## சமய சமூக ஒற்றுமையின் அவசியம் பற்றி ராஜாங்க மந்திரி செய்தி

''மல்வத்தை பீடாதிபதி மகாநாயக்க தேரோவின் நல்லெண்ண விஜயத்தையொட்டியும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சர்வசமய சம்மேளனத்தையொட்டியும் நான் 'ஈழநாடு' பத்திரிகைக்கு இச்செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வணக்கத்துக்குரியமகாநாயக்கதேரோ மேற்கொண்டிருக்கும் புனிதவிஜயமும் பல சமயசார்புள்ளவர்களும் உரை நிகழ்த்த விருக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சர்வ சமய சம்மேளனமும் இந்தநாட்டில் வாழும் பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களிடையே இப்பொழுது நிலவிவரும் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் மேலும் பிணைத்து வலுப்படுத்தும் என்பதில் நான் மிக்க நம்பிக்கை கொண்டுள்ளேன்.

(5-ம் பக்கம் பார்க்க)

# எப்பிரச்னைக்கும் சமாதான தீர்வு

## பிரதமர் டட்லி சேனநாயகா கொழும்பு திரும்பினர்

### கவர்னர்ஜெனரல், தற்காலிக அரசாங்கத் தலைவர் வரவேற்பு



கொழும்பு, புதன்

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா 2 மாதகால வெளிநாட்டு சுற்றுப் பிரயாணத்திற்குப்பின் இன்று காலை கொழும்பு திரும்பினர். பிரதமர் கடந்த பெப்ரவரி 20-ம் திகதி வெளிநாடுசென்ருர். சுகத்துடனும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்ட பிரதமர், தமது வைத்திய பரிசோதனை பூரண திருப்தியளித்ததாகக் கூறினர்.

பிரதமரை ஏற்றிவந்த ஏர்சிலோன் ''வி. ஸி. 10'' விமானம் காலை 8-30 மணிக்குச் சற்றுப்பின் கொழும்பில் இறங்கியது.

வாஷிங்டனில் தமக்களிக்கப்பட்ட வைத்திய பரிசோதனை பூரண திருப்தியளித்ததாக திரு. டட்லி சேனநாயக்கா கூறினர்.

கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா, அரசாங்க பதில் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, செனட்சபைத் தலைவர், எம். பி.க்கள், ராஜதந்திரிகள் ஆகியோர் பிரதமரை வரவேற்றனர். மகாசங்க அங்கத்தவர்கள் பிரித் ஓத, விமானப்படை பிரதமருக்கு மரியாதை அணிவகுப்பு நடத்தியது.

பிரதமர் அமெரிக்காவில் ஜனதிபதி ஜோன்ஸன், வெளிமந்திரி திரு. ரஸ்க், உலகவங்கி, சர்வதேச நாணயசபை ஆகியவர்களுடன் பேச்சு நடத்தினர். பிரதமர் அமெரிக்காவிலிருந்த போது மண்டலசார்பற்ற கொள்கையை இலங்கை பின்பற்றி, உலக நாடுகளுடன் இந்த அடிப்படையில் உறவை நிலைநாட்ட மேற்கொள்ளும் முயற்சிகள்பற்றி அந்நாட்டுத் தலைவர்களுக்கு வற்புறுத்திக் கூறினர்.

இலங்கையில் இன, மத ஒற்றுமை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாயும், பொருளாதார முன்னேற்றம் இதனுல் சாத்தியமாகியிருப்பதாயும் பிரதமர் அவர்களிடம் விளக்கினர். லண்டனில் வருகிற மே மாதம் நடைபெறவிருக்கும் உலகவங்கி, சர்வதேச நாணயசபை மகாநாடு இலங்கைக்கு மிக முச்கியம் வாய்ந்தது எனக் கூறிய பிரதமர், இலங்கைக்கு 1965-ம் ஆண்டு கொடையாளி நாடுகள் 5 கோடி டாலர் உதவியளித்ததென்றும் ஆனல் இதுவரை அந்த உதவிகள் வந்துசேரவில்லையென்றும் இப்போதுதான் இந்தஉதவிகள் வந்துகொண்டிருக்கிறது என்றும் அவர் கூறினர்

(5-ம் பக்கம் பார்க்க்)

## காவலிலுள்ள காப்டனை விடுதலை செய்ய கோரி மனு

### 30 ந் திகதி விசாரணை

கொள்ளுப்பிட்டி, புதன்

காப்டன் டி வி வீரசிங்கா என்பவரை சட்டவிரோதமாக ஹல்ஸ்டோப்ர் சிறையில் காவலில் வைத்திருப்பதாகவும் அவர் துன்புறுத்தப் படுவதாகவும் இவ்விதம் அவரைக் காவலில் வைத்திருப்பது சட்ட்விரோதமானதுடன் அதற்கு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசிக்கு அனுமதியில்லை யென்றும் காப்டன்வீரசிங்காவை விடுதலை செய்ய உத்தரவிட வேண்டுமென்றும் கோரி சுப்ரீம் கோர்ட்டில் காப்டன் வீரசிங்காவின் சகோதரி செல்வி சாந்தி வீரசிங்கா ஆள் ஆஜர் கட்டளை மனுவொன்றை தாக்கல் செய்திருக்கிருர்.

இந்த மனு இம்மாதம் 30-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று தெரிவித்த நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம், பிரதிவாதி திரு ஜி வி பி சமரசிங்காவை அன்றைய தினம் கோர்ட்டில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பித்தார்.

காப்டன் வீரசிங்காவுடன் காவலில் வைக்கப்பட்டவர் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## சமயத் தலைவர்கள் இதற்கு வழிகாட்ட வேண்டும்

### மகாநாயகதேரோ கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

"எந்தவொரு பிரச்னையையும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும்" என்று மல்வத்தை மடாதிபதி அமுனுகம ஸ்ரீ விபாஸி மகாநாயகதேரோ நேற்றுக் காலை தோலகட்டியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்று தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மகாநாயகதேரோ கீரிமலைக் கேணியில் நீராடியதுடன் கீரிமலைச் சிவன்கோவில், நல்லூர்க்கந்தசுவாமிகோவில்களுக்கும் சென்று தரிசித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மல்வத்தை பீடாதிபதி மகாநாயகதேரோவுக்கு நேற்று தோலகட்டி, நல்லூர், கீரிமலை, மருதனுமடம் ஆகிய இடங்களில் வரவேற்பளிக்கப்பட்டது.

தோலகட்டி ஆச்சிரமத்தில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் மகாநாயக தேரோ கூறியதாவது:

### சமாதானப் பேச்சு மூலம் பிரச்னைக்குத் தீர்வு


மொழிப்பிரச்னை சமாதான முறையில் தீர்க்கப்பட்டுள்ளது. எந்த ஒரு பிரச்னையும் சமாதான ரீதியில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

சமயத்தலைவர்கள்எல்லோரும் சமாதானமான வழியில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

சர்வசமய காங்கிரஸை இம்முறை கண்டியில் கண்டி மாநகரசபையின் நூற்றாண்டு பூர்த்தி விழாவோடு நடத்த ஆலோசனை செய்திருந்தோம். ஆனல் யாழ்ப்பாணமே சர்வசமய காங்கிரஸ் கூட்டம் நடத்த பொருத்தமான இடம் என நாங்கள் கருதி இங்கு அதனை நடத்துவதற்கு இணங்கினேம்.

தோலகட்டி ஆச்சிரம வாழ்க்கை பற்றிக் குறிப்பிட்டு அவர் பேசுகையில், ஆச்சிரமத்திலிருப்பவர்கள் வாழும் வாழ்க்கை தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளது என்றும் இங்குள்ளவர்கள் செய்துவரும் வேலைகள் எவ்வளவோ பயனுள்ளவையாக இருக்கின்றன என்றும் பகவான் எல்லோருக்கும் அருள் பாலிக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

மகாநாயகதேரோவை வரவேற்றுப் பேசுகையில், [illegible]



ஜே. எமிலியானுஸ்பிள்ளை கூறியதாவது:

இக்கிராமத்தில் வாழும் இளைஞர்களுக்கு விவசாயத்தில் பரிச்சயம் ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே தோலகட்டி ஆச்சிரமம் ஆரம்பிக்கப்பட்டது

இங்கு இரு போதகர்கள் இறைவழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்கள். மற்றவர்கள் தத்தமக்குக் கைவந்த தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

மகாநாயக்காவின் வரவு மிக்கமகிழ்ச்சியைத் தந்துள்ளதுஎன மேற்றிராணியார் ஆரம்பத்தில் எடுத்துக் கூறினர். இதன்பின்னர் மோட்டார் ஊர்வலத்தில் மகாநாயக தேரோ கீரிமலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

### கீரிமலையில் நீராடினர்

கீரிமலையில் மகாநாயக தேரோ கேணியில் நீராடினர். கீரிமலையிலுள்ள சிவன் கோவிலுக்கு மகாநாயக தேரோ சென்று தரிசித்த போது அங்கு ஸ்ரீலஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் காளாஞ்சி கொடுத்து வரவேற்ருர். வேதாகம பாடசாலையொன்று யாழ்ப்பாணத்தில் நிறுவித்தர முயற்சிக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## சமயங்களுக்கிடையில் சகிப்புத்தன்மை

### சம்மேளன மகாநாட்டில் பிரமுகர்கள் வற்புறுத்து

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஆரம்பமான சர்வசமய சம்மேளன மகாநாட்டில் பல்வேறு சமயங்களையும் சார்ந்த தலைவர்களும் பிரமுகர்களும் உரை நிகழ்த்தினர்கள். அவர்கள் அனைவரும் சமயத்தவர்களுக்கிடையில் சகிப்புத்தன்மையும் ஐக்கியமும் நிலவவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினர்கள்.

சோராஸ்தியன் மதத்தைச் சேர்ந்த ரி. பி. ரஸ்ரொம்ஜி பேசுகையில், பாஸி மக்களின் மதமாகிய சோராஸ்தியான் மதம் முதன் முதலில் ஈரானில் உற்பத்தியாகியதென்றும், அது மிகப் பழைய மதம் என்றும், ஈரான் மக்களும், இந்து மக்களும் ஒரே வழித்தோன்றல்களென்றும் தெரிவித்தார்.

கொழும்பு சர்வசமய காங்கிரஸின் உபதலைவர் அல்காஷ் எஸ். எம். ஏ. ரஸித் பேசும் போது கூறியதாவது:-

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தினசரி குறிப்பிட்ட நேரத்தில் தியானம் செய்யுங்கள் உணவு, உறக்கம், நடமாட்டம், கர்மம் முதலிய விஷயங்களில் மிதமாக நடந்து கொள்பவனுக்கு தியானயோகம் சித்திக்கும். அதனால் வாழ்க்கை புனிதப்படும். பரமபத மோட்ச சாம்ராஜ்யத்தை அடையலாம்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams/EELA NADU Jaffna. Phone: [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ௳ 8 (21-4-66)


## யாதும் ஊரே யாவரும் கேளிர்

மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் இருபது நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் கூடி, தமிழின் வளர்ச்சி, ஆராய்ச்சி பற்றிக் கவனம் செலுத்தி வருகின்றனர். இது தமிழ் கூறும் நல்லுலகுக்குப் பெருமை அளிப்பதாகும். இதைவிடப் பெருமை தருவது 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உயர்ந்த இலட்சியத்துடன் மகாநாடு ஆரம்பிக்கப் பெற்றதும், மகாநாட்டை ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்திய மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், பலமொழியினர், பல மதத்தினர் கலந்த மலேசிய சமுதாயத்தில் தமிழ் மொழிக்குரிய உயர்ந்த அந்தஸ்து தரப்படுமென அறிவித்ததுமாகும்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த மகாநாட்டில் தமிழ் நாட்டின் முதல்வர் திரு பக்தவத்சலம், மதுரைப் பல்கலைக் கழகத்தில் தென் கிழக்காசிய மொழி, வரலாற்று ஆராய்ச்சித் துறையொன்றை நிறுவுவது பற்றி தமிழ்நாட்டு அரசாங்கமும் மதுரைப் பல்கலைக்கழகமும் ஆலோசித்து வருவதாகவும், தென் கிழக்காசியாவிலுள்ள அரசாங்கங்கள் பல்கலைக் கழகங்கள் இதற்கு ஒத்துழைக்குமாயின் வரவேற்கத்தக்க தென்றும் தெரிவித்திருந்தார். இந்த சிறந்த யோசனையை நிறைவேற்றுவதன் மூலம் தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையில் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்திவிட முடியும்.

இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள பல்கலைக் கழகங்களில் பிரெஞ்சு, இலத்தீன் போன்ற ஐரோப்பிய மொழிகள் போதிக்கப் படுவதுடன் அவற்றின் வளர்ச்சி, வரலாறுபற்றியும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. ஆனால் அண்டை நாடுகளுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டுமெனக் கூறிக்கொள்ளும் தென்கிழக்காசிய நாடுகள், மொழியாலும் மற்றும் கலாசாரத் தொடர்புகளாலும் நட்புறவைப் பலப்படுத்தி ஒற்றுமையை உருவாக்கப் போதிய முயற்சி எடுக்காதது பெரிய குறை. இந்தக் குறையை நீக்கவேண்டியதன் அவசியத்தை தமிழ்நாடு முதல் அமைச்சர் உணர்ந்துள்ளதுடன் தென்கிழக்காசியாவிலுள்ள இதர நாடுகளின் ஒத்துழைப்பையும் அவர் கோரியிருப்பது பாராட்டத்தக்கது. மதுரைப்பல்கலைக்கழகத்தின் உபஅத்யட்சகராகப் பதவியேற்றிருக்கும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் பல மொழிகளையும் கற்றறிந்த புலவர். மொழியாலும் மற்றும் ஆராய்ச்சித் தொடர்பாலும் நட்புறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியுமென்பதை நன்கு அறிந்து கொண்டவர். எனவே திரு. பக்தவத்சலம் தெரிவித்த யோசனை முதலில் மதுரைப் பல்கலைக்கழகத்தில் விரைவில் செயல்படத் தொடங்குமென எதிர்பாப்பதில் தவறில்லை. மதுரைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழிப் பிரிவு இடம் பெறுவது வரவேற்கத் தக்கது. இதன்மூலம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில், சென்ற சில ஆண்டுகளாக நிலவிவந்த தப்பெண்ணங்கள் நீங்கவும் பண்டைய உறவு மீண்டும் வலுப்பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

மலேசியால் நடைபெறும் தமிழாராய்ச்சி மகாநாடு இலங்கையில் ஒரு சிலருக்குப் பொச்சரிப்பை உண்டாக்கியிருக்கிறது. ''காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்'' என்பார்கள். ''தமிழ், தமிழர்'' என்றாலே ஆத்திரமடையும் ஆர். ஜி. சேனநாயக்கா, மலேசியாமகாநாட்டை ''வகுப்புவாத மகாநாடு'' என்று குறிப்பிட்டது நமக்கு ஆச்சரியமளிக்கவில்லை. இந்தமகாநாட்டில் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் ஒருவரான சிங்களவரும், பௌத்தபிக்குவும்கூட ஆராய்ச்சிக்கட்டுரைகள் சமர்ப்பித்திருப்பதுடன் மகாநாட்டிலும் கலந்து கொள்வதைக்கூட ஆர். ஜி. அறியவில்லைப்போலும்!

சரவாவில்

## சீனர்களுக்கு கட்டுப்பாடு

கோலாம்பூர், ஏப். 20 மலேஸிய சரவாவில் ஊரடங்கு உத்தரவுபோடப்பட்டிருக்கிறது. அங்குள்ள சீனர்களின் நாசவேலைகளைத் தவிர்க்கும் பொருட்டு கடந்த ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக அவர்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்

16 முதல் 40 வயதான சீனர்கள் பொலிஸ்நிலையங்களுக்குச் செல்லவேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்தோனேஷிய ஊடுருவாளர்களுடன் சீனர்களும் ஒத்துழைத்து வேலை செய்கிறார்கள் எனக் கூறப்படுகிறது.

## பாதை சீர்கேடு

கோண்டாவில், புதன் கோண்டாவில் இருபாலை வீதி குண்டும் குழியுமாக இருப்பதால்பாதசாரிகளும், வாகனச் சாரதிகளும் கஷ்டப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. முன்பு பொது வேலைப்பகுதியினரால் வீதியைத் திருத்துவதெற்கென பறிக்கப்பட்ட கற்கள் யாவும் இப்போது சிதைந்துள்ள நிலையில் காணப்படுகிறது.

# யாழ்ப்பாண வரலாறு கூறும் தமிழ் நூல்கள்

(கே. எஸ். நடராசா, இலங்கை வானொலி)

கோலாலம்பூரில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிலவற்றின் சுருக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வரலாறு பற்றி இதுவரை வெளிவந்த நூல்கள் அந்நாட்டின் சரித்திரத்தை ஐயந்திரிபற ஆராய்ந்து காட்டவில்லை. அவற்றைத் துருவிப் பார்த்தால் மேலும் பல உண்மைகள் வெளியாதல் கூடும். யாழ்ப்பாண வரலாறு பற்றிப் பல ஆசிரியர்கள் தந்துள்ள கருத்துக்களில் சில பல தப்பபிப்பிராயங்களும் இடர்ப்பாடுகளும் முரண்பாடுகளும் இருக்கக் காணலாம். அவற்றுள் இரண்டொன்றை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் செய்த 'யாழ்ப்பாண வைபவமாலை' என்ற நூலே இப்பொழுது யாழ்ப்பாண வரலாற்றிற்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. அந்நூலுக்கு முதல் நூல்களாக வையா பாடல், கைலாயமாலை பரராசசேகரனுலா, இராசமுறை ஆகிய நூல்கள் கொள்ளப்பட்டன எனத் தெரிகிறது. அவற்றுள் வையா பாடலும், கைலாய மாலையுமே இப்பொழுது பெறத்தக்கனவாயுள்ளன.

மயில்வாகனப் புலவர் வையாபாடலை முதல் நூலாகக்கொண்டவாறு, வையா ஆசிரியர் அகத்திய முனிவரின் பேரனாகிய சுபதிட்டு முனிவர் முன்மொழிந்த காதையை முதல்நூலாகக் கொண்டு தம் பாடலை யாத்துள்ளார்.

கலியுக ஆண்டு மூவாயிரத்தில் (அதாவது கி. மு. 101ல்) விபீஷணன் முன் யாழ் [illegible] வாசினைபுரிவோன் இலங்கை [illegible] வடகடற்கரையில் உள்ள மணற்றிடற் காட்டினைப் பரிசாகப் பெற்று இந்தியாவிலிருந்து அரசனொருவனைக் கொணர்வித்து அரசாட்சி தொடங்கினான் என்கிறது வையா பாடல். [illegible]

அப்பொழுது இலங்கையில் வடபால் அறிவாற்றல் மிக்க தமிழ்மக்கள் வாழ்ந்தனர் என்பது, அக்காலத்தே மதுரைத் தமிழ்ச்சங்கத்தமர்ந்த ஈழத்துப் பூதந்தேவனார் வரலாற்றாலும், கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஈழத்திலிருந்து பேரரசோச்சிய எல்லாளன் சரித்திரத்தினாலும் வலுப்பெறும்.

இலங்கையில் வடகடற்கரையுள்ள மணற்றிடற்காடு யாழ்ப்பாணம் என்ற பெயரினை எவ்வாறு பெற்றதென்பற்றிப் பலர் பலவேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

உக்கிரசிங்கன் மகன் வாலசிங்கன் யாழ்ப்பாடி ஒருவனுக்கு மணற்றிடற் காட்டைப் பரிசாக வழங்கினான் என்னும் கைலாயமாலை.

வாலசிங்கனிடம் கவி வீரராகவன் அந்நிலத்தைப் பரிசாகப்பெற்றான் என்னும் யாழ்ப்பாண வைபவமாலை.

அந்தகக்கவி ஒருவனுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழ்ச் சமூகம்

- பி. எல். பண்டிதரத்ன -

(புவியியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணத் தமிழர் என்று பெரும்பாலும் கருதப்படும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினர், இலங்கையின் பல பாகங்களிலும் செறிந்து காணப்படுகின்றனர். வடகிழக்கு மாகாணங்களிலேயே இவர்கள் பெருந்தொகையினராக உள்ளனர். சிங்களவர் பெரும்பாலும் வாழ்கின்ற மாகாணங்களில் இவர்கள் நகரங்களைச் சார்ந்து காணப்படுகின்றனர்.

இக்கட்டுரை மூன்று முக்கிய பகுதிகளை உடையது. முதல்பகுதி, பொது அம்சங்கள் பற்றியது. (அ) 1911-ம் ஆண்டுக்குப்பின்னர், தமிழ்ச் சமூகத்தின் பெருக்கத்தில் காணப்பட்ட சில முக்கிய அம்சங்கள். (ஆ) சமூகத்தினரின் கிராம நகர்ப்பகுதிகளின் அமைப்பு (இ) மாவட்ட அடிப்படையில் புள்ளி விவகாரங்களின் விளக்கம். இக்கட்டுரையின் முக்கிய பகுதி இரண்டாம் பகுதியாகும். (நகரப் பிரதேச ஆய்வு), இங்கு 9 நகரப் பிரதேசங்கள் (குடிப் புள்ளி விவரம். தொழில் முறைகள், இடம் பெயரும் தன்மைகள்) விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இந்த 9 நகர் பிரதேசங்களின் சமூகப் புவியியல் பற்றிய ஆய்வில் மேல்வரும் இந்த இயல்புகள் விளக்கப்பட்டுள்ளன.

(அ) தமிழர் பெரும்பாலும் நிலையாக உள்ள யாழ்ப்பாண நகரமும், குடாநாட்டின் பிறபட்டினங்களும்.

(ஆ) வடபிரதேசத்தில் உள்ள நிலைபற்ற பட்டினங்களும் (யாழ்ப்பாண மாவட்டத்தில் [illegible] அதிகமாக நிகழ்கின்றது) கிழக்குப் பிரதேச பட்டினங்களும், தமிழர் நிலையாக இருப்பதோடு பட்டினங்களில் தொழில்நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகின்றனர்.)

(இ) கொழும்பு மாநகரிலுள்ள தமிழ்த் தொழிலாளர்களும் உத்தியோகத்தர்களும் அவர்கள் குடியேறியுள்ள பகுதிகளும் தேசிய நகராட்சிக் கருமங்களில் வகிக்கும் பங்கும்.

(ஈ) கொழும்புக்கு வடக்காக உள்ள பகுதியில் ஏற்பட்டுவரும் குடியிருப்பும். கொழும்புக்கு தெற்காக உள்ள பட்டினங்களினின்று வெளியேறுதலும்,

(உ) மலைநாட்டுப் பட்டினங்களில் குறைவாக ஏற்பட்டுவரும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினரின் குடியிருப்புக்களும், பெருகிவரும் பொருளாதார நடவடிக்கைகளும், நிலைமாறுவலையத்திலுள்ள பட்டினங்களில் காணப்படும் ஓரளவு நிலையான சமூக அமைப்பும், குன்றிவரும் பொருளாதார நடவடிக்கைகளும்.

மூன்றும் பகுதி முடிவுரையாகும். இச் சமூகத்தினர் வகித்துவரும் மிக முக்கிய பங்கின் காரணமாக, எல்லாச் சமூகங்களிடையேயும் இசைவு இருந்துவர வேண்டியது அவசியமாகும். இச் சமூகத்தினர் தனித்து இயங்காது பெரும்பான்மைச் சமூகத்தினருடன் ஒருங்கிணைந்து இலங்கையின் தேசிய அபிவிருத்திக்குக் கூட்டாக உதவுதலும் வேண்டற்பாலது. இக்கருத்துக்களும் கட்டுரையில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

# ஐயாறன் எழுதுவது

'புத்தர் காலத்துக்கு முன்பாகவே இந்துக்கள் தியானம் பழகிவந்தனர். அதையே புத்தர்பெருமான் கைக்கொண்டு பிறருக்கும் உபதேசித்தார். எல்லாரும் தியானம் பழகுங்கள்' என்று மல்வத்தை மகாநாயக்கதேரோ அவர்கள் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் தியானத்தை வற்புறுத்தி உபதேசித்தார். எல்லாச் சமயத்தவருக்கும் இது பொருந்தும். இந்துக்கள் ஏற்கனவே தியானத்தைப் பழகிவந்துள்ளனர் என்பதை அவர் பகிரங்கமாகக் கூறி, இந்து சமயத்தை மறைமுகமாய்ப் போற்றியதைக் கேட்டதும் மகிழ்ச்சியாக இருந்தது. அவருக்கு இந்து சமயத்தின் மீது வெறுப்பு இல்லையென்பதும் மதிப்பு அதிகமுள்ளதென்பதும் அவர் உண்மையில் சமய சமரச உள்ளம் படைத்தவரென்பதும் வெளியாயிற்று.

ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் அதுவும் பெரிய குருபீடத்திலுள்ளவர் வேறு ஒரு சமயத்தைப் பற்றி இப்படிப் போற்றிப் பேசுவது மிகமிக அபூர்வம்.

புது வருடப்பிறப்பைப் பற்றி அவர் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையைப் படித்தேன். அதிலும்கூட, புதுவருட சகாப்தம் புத்தருக்கு முன்பாகவே இந்துக்கள் கைக்கொண்டுவந்த மிகப் புராதன வழக்கமென்று குறிப்பிட்டிருந்தார். இந்து சமயத்திலே அவருக்குள்ள மதிப்புக்கு இதுவும் ஓர் அத்தாட்சி.

ஃ ஃ ஃ

தியானத்தின் முக்கியத்தை இந்து மகான்கள் பெரிதும் வற்புத்தி வந்திருப்பினும், இன்று இந்துக்களில் எவ்வளவுபேர் தியானம்செய்கின்றனர்? மகாநாயக்கதேரோ கூறியதைப் பற்றி இந்துக்கள் பெருமையும் மகிழ்ச்சியுமடையலாம். ஆனால்தியானம்செய்யும் பழக்கத்தைக் கைக்கொள்ளாவிடில் இந்துக்களாக இருந்தும் என்ன பயன்? பௌத்தப் பெரியார் இங்கு வந்து கூறிய பிற்பாடாவது இங்குள்ளவர்களும் சிறப்பாக இந்துக்களும் இவ்விஷயத்தில் புதிய ஆர்வம் காட்டுவதாயின் எவ்வளவோ ஆன்மீக இன்பம் அடையலாம். மகாநாயக்க தேரோவின் இந்த விஜயத்தால் நாம் நல்ல பயனும் பெற்றதாக இருக்கும்.

சரித்திரத்திலேயே முதல் முதலாக யாழ்ப்பாணம் வருகையில், அப்பெரியாரை இயற்கை அன்னையும் வெகு அன்பாக வரவேற்றாள். மாலை 4 மணிக்கும் அனல் வீசும் இக்காலத்தில், திடீரென யாழ். நகரில் பலத்த மழை அரை மணி நேரம் பொழிந்து ஊரையும்தெருக்களையும் சுத்தமாக்கி குளிரவும் வைத்தது. வானத்தில் மேகராஜன் குடைபிடித்து, மகாநாயக்க தேரோவுக்கு நல்வரவு அளித்தான். அவரது இந்த விஜயம் இனிமிக நல்ல பலன்களை அளிக்கலாமென்பதற்கு இது நல்லதோர் சுப சகுனமாக இருந்தது.

ஃ ஃ ஃ

போயா (பூஜா) தினங்களை விடுமுறையாக்கியதைப்பற்றி மாவிட்டபுரம் கோவில் குருக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துவிட்டு, ஒரு முக்கிய யோசனையைக் கூறினார். இந்த விடுமுறைகள் இந்துக்களின் விரதநாட்களுக்கு மறு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வியட்னும்

# சிவில் அரசாங்கம் கோரினுலும் அமெரிக்கா வாபஸாகாது

## ஜப்பான் அல்லது பர்மாவில்பேச்சு நடத்த ஜோன்ஸன் விருப்பம்

### ஜப்பானிய சமாதான முயற்சிக்கு ஹோசிமின் கைவிரிப்பு

வாஷிங்டன், ஏப்ரல் 20

ஜப்பானிலோ அல்லது பர்மாவிலோ வியட்னும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதை ஜனுதிபதி ஜோன்ஸன் வரவேற்றிருக்கிருர்.

செல்வாக்குள்ள அமெரிக்க செனட்டர் திரு. மான்ஸபீல்ட் கூறிய இது சம்பந்தமான யோசனையை அதற்குமுன் ராஜாங்க இலாகாவும் வரவேற்றது.

ஐ.நா.விலுள்ள அமெரிக்கப்பிரதிநிதி திரு. கோல்ட்பர்க், ஜனுதிபதியுடன் 45 நிமிடம் சம்பாஷணை நடத்தியபின் இந்தமுடிவு அறிவிக்கப்பட்டது.

திரு.ஜோன்ஸன் சீட்டோ பொதுக் காரியதரிசியுடனும் வியட்னும் பற்றி நேற்று அரைமணி நேரம் விவாதித்தார்.

### ஜாப்பானிய தூது தோல்வி

இதற்கிடையில் வியட்னும் சமாதானம்பற்றி ஜப்பான் மேற்கொண்ட ஒரு முயற்சியை வடவியட்னும் அதிபர் ஹோஸிமின் நிராகரித்திருக்கிருர்.

ஆளும்கட்சியான லிபரல் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த எம்.பி, திரு. மட்சூடா, தாம் வியட்னும்பற்றிப் பேச ஹானேய்க்குவருவதாக அறிவித்திருந்தார் ஆனுல் அவர் வழியில் கம்போடியத் தலைநகர் நான்பெனிசேர்ந்ததும், பேச்சுக்குத் தக்க தருணம் வரவில்லை என்று கூறும் திரு ஹோஸிமின்னின் தந்தி அவருக்குக்கிடைத்தது. திரு. மட்சூடா தனிப்பட்டமுறையில் இம் முயற்சியை மேற்கொண்டார்.

இந்த நிராகரிப்புக்குப் பின், அமெரிக்க செனட்டர் மான்ஸ்பீல்ட் கூறிய யோசனையை திரு ஜோன்ஸன் வரவேற்று, அமெரிக்கா, சீனு, வடவியட்னும், தென்வியட்னும் ஆகியநாடுகள் டோக்கியோவில் அல்லது ரங்கூனில் சமாதானப்பேச்சு நடத்தலாம் எனக் குறிப்பிட்டார்.

வியட்னும்பிரச்னையைபோர்முனையிலிருந்து, சமாதான மேடைக்கு கொண்டுவர வேண்டுமென்பதே அமெரிக்காவின் நோக்கம் என்றும், ஆசிய நாடுகள் இவ் விஷயத்தில் எடுத்துக்கொள்ளும் முயற்சியை அமெரிக்கா வரவேற்கும் என்றும் அவர் கூறினுர்.

### அமெரிக்கா வாபஸாகாது

இது நிற்க, தேர்தல்மூலம் தென்வியட்னுமில் பதவிக்கு வரும் எந்த சிவில் அரசாங்கமும், அமெரிக்கப்படைகளை வாபஸ்பெறுமாறு கோரினுல் வாஷிங்டன் அப்படிச் செய்யாது எனக்கூறப்படுகிறது. வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க், உப ஜனுதிபதி திரு. ஹம்ப்ரி ஆகியோரின் அறிக்கைகளைத் தொடர்ந்து ஐ.நா. பார்வையாளர்கள் இவ்வாறு கருதுகின்றுர்கள்.

வியட்னுமில் எந்தஅரசாங்கம் பொறுப்பாயிருந்தாலும் கம்யூனிஸ ஆக்கிரமிப்பிலிருந்து அப்பகுதிகளைப் பாதுகாப்பது அமெரிக்காவின் பொறுப்பு என்றவகையில் இருவரும் கருத்துதெரிவித்திருக்கிருர்கள்.

### புதிய துருப்புக்கள்

தென்வியட்னுமில் ஆஸ்திரேலியத்துருப்புக்களின் எண்ணிக்கை 4500 ஆக அதிகரிக்கப்படவிருக்கிறது.

ஐரோப்பாவிலிருந்து 30,000 அமெரிக்க துருப்புக்கள் தென்வியட்னுமில் சண்டையிடுவதற்காக அழைக்கப்படுமென்றும், இவற்றில் பாதி அளவு புதிய துருப்புக்கள்உடனடியாக ஐரோப்பா செல்லும் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில்சமீபத்தில் அமெரிக்க விமானங்கள் ஹானேய்க்கருகிலுள்ள விமான எதிர்ப்பு ராக்கெட் தளங்களை தாக்கியது. பூசலை அதிகட்படுத்தியதாகும் என வாஷிங்டனில் அதிகாரி ஒருவர் கூறினுர்.

பெரிய மின்சார நிலையமொன்றும் அப்போது தாக்கப்பட்டது.

15சதவிகிதமின்சாரத்தை இந்தநிலையம்தான் சப்ளை செய்கிறதென்றும், அதற்கு முன்னைய தாக்குதலுக்குப் பின், இது புதுப்பிக்கப்பட்டிருந்ததென்றும் கூறப்பட்டது.

நேற்றைய தாக்குதலில் 4 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன.

---

இந்திய உணவுத் தேவை

## ரூ. 250கோடி அமெரிக்கஉதவி: ஜோன்ஸன் கைச்சாத்து

வாஷிங்டன், ஏப்ரல் 20

இந்தியாவுக்கு அவசர உணவு உதவி அளிக்கும் 50 கோடி டாலர் அமெரிக்க பார்லிமெண்ட் தீர்மானத்தில் ஜனுதிபதிஜோன்ஸன் நேற்று கைச்சாத்திட்டார். 35 லட்சம் டன் உணவுத்தான்யம் அனுப்புவது இதில் முதலாவது அம்சம்.

இவ்விஷயத்தில் காங்கிரஸ் ராஜதந்திரத்துடன் நடந்து கொண்டிருப்பதாக கையொப்பமிடும்போது ஜனுதிபதி குறிப்பிட்டார். அடுத்த அறுவடைவரை இந்தியாவுக்கு உதவுமாறு உலக நாடுகளுக்கு அவர் விண்ணப்பம் ஒன்றையும் விடுத்தார்.

விவசாய அபிவிருத்தியில் திறமையும், உறுதியும் கொண்டு இந்தியா செயல்பட்டு வருகிறது என அவர் கூறினுர்.

---

### ஊடுருவல்?

புதுடில்லி, ஏப். 20

நாடியா ஜில்லாவில் ஒரு பாகிஸ்தானியர் கோஷ்டி ஊடுருவல் செய்தபோது, எதிர்த்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பாகிஸ்தானி மாண்டார் என அறிவிக்கப்பட்டது. 25 கால்நடைகளுடன் மிகுதிப்பேர் தப்பி ஓடியதாகவும், மற்ருேர் சம்பவத்தில் 12 எருமை மாடுகளை அவர்கள் கடத்திச் சென்றதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

டாஷ்கண்ட் ஒப்பந்தத்திற்குப்பின் அறிவிக்கப்பட்டமுதலாவது ஊடுருவல்கள் இவை.

### லண்டனில் சிங்கைப் பிரதமர்

லண்டன், ஏப். 20

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான் யூ லண்டன் வந்திருக்கிருர். புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து அவர் அரசாங்கத்துடன் பேசுவார் எனக்கூறப்பட்டது.

### சீன தூதராலயம் தீக்கிரை

ஜாகர்த்தா, ஏப். 20

நூற்றுக்கணக்கான மாணவர்கள், நேற்று இங்குள்ள சீன கான்ஸல் காரியாலயத்தைதாக்கி எரித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

## தமிழ் மகாநாடு பற்றிய அறிக்கை ஆங்கிலத்தில் மட்டும்தானு?

### கோலாலம்பூர் கூட்டத்தில் ம. பொ. சிவஞானம் கண்டனம்

கோலாலம்பூர், ஏப். 20

உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில் நிகழ்த்தப்படும் பிரசங்கங்கள், வெளியாகும் அறிக்கைகள், இதர தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை தமிழில் வெளியிடுவது குறைவாய் இருக்கிறது என திரு. ம. பொ. சிவஞானகிரரமணியார் மகாநாட்டில் குற்றப்சாட்டினுர்.

ஆங்கில மொழியில் மட்டுமே தமிழ் மகாநாடு சம்பந்தமான விஷயங்கள் வெளியிடப்படுவதாயும், தமிழ் மகாநாட்டின் அறிக்கைகள் ஆங்கிலத்தில் மட்டுமின்றி தமிழிலும் வெளியிடப்படவேண்டும் என்றும் அவர் கூறினுர்.

"சிங்கப்பூரிலும், மலேஸியாவிலும் 3 பெரிய தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. எனவே மகாநாடு சம்பந்தமான விஷயங்கள் தமிழிலும் வெளியிடப்பட வேண்டும்" என்ருர் சிவஞானம்.

சேவியர் தனிநாயகம் அடிகள் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் தமிழ், தமிழ் கலாச்சாரம் ஆகிய விஷயங்களுடன் தென்கிழக்காசியாவின் தொடர்புகள் பற்றி ஆராயப்பட்டன.

தென் கிழக்காசியாவுக்கும் [illegible] இடையேயான கலாச்சாரத் தொடர்புகள் பற்றி மலேஸியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சிங்காரவேலு தனது ஆராய்ச்சியைச் சமர்ப்பித்தார்.

தென்கிழக்காசியாவில் இராமாயணம் பற்றிய ஆராய்ச்சி, அனுஷ்டானம் ஆகியன சம்பந்தமாக அமெரிக்க வில்சன் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ஹேரிபக் தனது ஆராய்ச்சியை வெளியிட்டார்.

மலேஸியா பல்கலைக்கழக பேராசிரியர் ஹோவெங்யோக் கிழக்காசியாவில் இந்திய புனித சின்னங்கள் பற்றிய ஆராய்ச்சியை வெளியிட்டார்.

இரண்டாவது மகாநாட்டுக்கு பிரெஞ்சு புதைபொருள் ஆராய்ச்சி டைரக்டரும், தமிழாராய்ச்சி சங்கத் தலைவருமான பாரிசைச் சேர்ந்த பேராசிரியர் ஜீன் பிலியோஸாட் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பெருபாலும் தொல்காப்பியம், இலக்கியம், சங்ககாலம் போன்ற புராதன தமிழ் இலக்கியம் பற்றி விவாதிக்கப்பட்டது.

மதுரை பல்கலைக்கழகத் தலைவர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர், மதுரை தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த பி. டி. ராஜன், பேராசிரியர் திரு. எஸ். திருஞானசம்பந்தன், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் வரதராஜன், இலங்கை பல்கலைக்கழக பேராசிரியர் திரு. வி. செல்வநாயகம், யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி பேராசியர் வி. சிங்கராயர் டேவிட் கேரள பல்கலைக்கழக பேராசிரியர்களான எம். ஐ. சுப்பிரமணியம், எம். மனுவேல், மலேஸியா பல்கலைக்கழக பேராசியர் வண. தனிநாயகம் அடிகள் ஆகியோர் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர்.

மாலைக் கூட்டத்திற்கு அண்ணமலை பல்கலைக்கழக பேராசிரியர் இராமனுதன் செட்டியார் தலைமை வகித்தார்.

டில்லி பல்கலைக்கழக பேராசியர் கே. ஆறுமுகம், சிங்கப்பூர் வானெலியைச் சேர்ந்த திரு. எம். டி. அரசு, மலேஸியாவைச் சேர்ந்த திரு. இரத்தினம் செட்டியார், திரு. வீரப்பன் ஆகியோர் இதில் தங்கள் ஆராய்ச்சிகளை வெளியிட்டார்கள்.

மலாய் மொழியில் தமிழ்ச் சொற்கள் பற்றி திரு. வீரப்பனின் ஆராய்ச்சி அமைந்திருந்தது. (பி. டி. ஐ.)

---

"பாக். - அரேபிய உறவு

## இஸ்லாமிய மத, ஆத்மீக அடிப்படை கொண்டது"

### கராச்சிஉபசாரத்தில் மன்னர் பைசால் உரை

கராச்சி, ஏப். 20

பாகிஸ்தானுக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையேயான உறவு இஸ்லாமியமத, ஆத்மீக அடிப்படையில் அமைந்திருப்பதாக ஸவூதி மன்னர் பைஸால் தமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

பைஸால் மன்னர் பாகிஸ்தானுக்கு 6நாள்விஜயத்தை மேற்கொண்டிருக்கிருர்.

அதிபர் அயூப்கான் பேசியபோது, சமீப இந்தோ — பாகிஸ்தான் சண்டையின் போது ஸவூதி அரேபியா அளித்த உதவிக்காக நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இருநாடுகளுக்குமிடையேயான இஸ்லாமிய சகோதரத்துவ உறவு சென்றகாலத்திலும், தற்காலத்திலும் மட்டுமின்றி. எதிர்காலத்திலும் ஒன்ருகப் பிணைக்கப்பட்டிருக்கிறது என அவர் கூறினுர்.

ஆத்மீக. பொருளாதார முன்னேற்றமே இரு நாடுகளின் பொதுவான லட்சியம் என்றும், இஸ்லாமியக்கோட்பாடுகளில் மன்னர் கொண்டுள்ள ஈடுபாடு பாராட்டத்தக்கதாய் இருப்பதாயும் அவர் கூறினுர்.

விசேஷ வைபவம் ஒன்றில் பாகிஸ்தானின் அதிஉயர்ந்த "நிஷானே பாகிஸ்தான்" என்ற விருது மன்னருக்கு வழங்கப்பட்டது.

இருதலைவர்களும் இன்று பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புதியபஸ்கள் விரைவில் இங்கு அனுப்பப்படும்'

## உதவிமந்திரி உறுதி

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை இ.போ.ச டிப்போவுக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த உதவி அமைச்சர் திரு.டி.பி. வெலகெதரவை டிப்போ அதிகாரிகளும் தொழிலாளரும் மலர்மாலை சூட்டி வரவேற்று தேநீர்விருந்தொன்றும் அளித்துக்கௌரவித்தனர்.

உடுப்பிட்டிஎம்.பி.திரு.மு சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தொழிலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளின்பேரில்பேசுகையில் வைகாசி மாதத்தில் புதிய பஸ்கள் பலவற்றை அனுப்பிவைப்பதாகஉறுதியளித்ததுடன் தொழிலாளர்கட்கான குளியலவை, விடுதி வசதியாகியறை போன்றவைகளை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கைஎடுப்பதாகவும் தெரிவித்தார்.

# கிராமசேவகருக்குப் பாராட்டு

மீசாலை, புதன்

வடமாகாண அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா சிரமதான இயக்கத்தை உருவாக்கி புளியம்பொக்கணையில் பகிரங்க ரஸ்தாவை அமைக்கஏற்பாடுகள் செய்த கிராமசேவகர் திரு. எஸ். சின்னத்தம்பியின் சேவையைப் பாராட்டி ஓர் விருது அனுப்பியுள்ளார்.

# 27 எம். பி.க்கள் கட்சி மாறினர்

நைரோபி, ஏப். 20

கென்யா பார்லிமெண்டில் ஆளும் கட்சியைச் சேர்ந்த 27 எம். பி க்கள் எதிர்க்கட்சிக்குச் சென்று தங்கள் தலைவராக திரு. ஒடிங்காவைத் தேர்ந்தெடுத்தனர்.

# திருமுறை விழா நடத்த முடிவு

கைதடி, புதன்

தென்மராட்சி மேற்குதிருஞானசம்பந்தர்சபை எதிர்வரும் வைகாசிமூல நட்சத்திரமான திருஞான சம்பந்தர் குருபூசையன்றுதொடக்கம் இருநாட்கள் திருமுறை மகாநாடு கோயிலாக்கண்டியில் நடாத்த தீர்மானித்துள்ளனர். இவ்விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்குதிருமுறைமனன, பேச்சுப் போட்டிகளும் இடம்பெறும் எனச் சபையின் பொதுச் செயலாளர் திரு. ஆ. கந்தையா தெரிவித்துள்ளார்.

# சீன-பாகிஸ்தான் ஒட்டகப் பாதை

ராவல்பிண்டி, ஏப். 20

சீனாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே வர்த்தகத்தை அபிவிருத்திசெய்வது சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையே காஷ்மீர் வழியாக ஒட்டகங்கள் செல்லும் பாதையொன்றைத் திறப்பதென முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

— —

# மைசூரில் 900 கோழிப்பண்ணைகள்

பங்களூர், ஏப். 20

விவசாய அபிவிருத்தியின் ஒரு அம்சமாக மைசூரில் 900 கோழிப்பண்ணைகள் திறக்கப்படவிருக்கின்றன.

# தேசீய ஒற்றுமை

## அரசாங்க மேதின கொண்டாட்டத்தில் முக்கிய அம்சமாக இருக்கும்

கொழும்பு, புதன்

தேசிய அரசாங்கம் மேதினக் கொண்டாட்டங்களை விரிவான முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகிறது.

மேதின ஊர்வலத்தின் போது அரசாங்க சார்புள்ள தொழிற் சங்கங்கள் எல்லாம் கலந்து கொள்ளவிருக்கின்றன. இந்த ஊர்வலத்தின்போது எந்தஒரு சாரார் மீதும் வெறுப்பைத்தூண்டும் கோஷங்களோ பகைமையைத் தூண்டிவிடும் கோஷங்களோ எழுப்பப்படமாட்டாதென அறியப்படுகிறது. தேசிய ஐக்கிய உணர்ச்சிக்கே முதலிடம் தரப்படும் என நம்பப்படுகிறது. இந்த ஊர்வலத்தில் எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள் தொழிலாளர்கள், ஆயுள் வேத வைத்தியர்கள், ஆகியோர் முன்னணியில் இருப்பார்கள் எனத்தெரிகிறது.

மேதினஊர்வலம்பொதுக்கூட்டம் ஆகியவை சம்பந்தமான இறுதிமுடிவுகள் நேற்று ஸ்ரீ கோதாவில் செய்யப்பட்டன. ஸ்தலஸ்தாபன உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாஸா இந்த ஆலோசனைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

— —

# "சிரமதானம் தேசியசேவை"

## உடுப்பிட்டியில் உதவி மந்திரி

பருத்தித்துறை, புதன்

"சிரமதானம் தலைசிறந்த தேசிய சேவையாகும். நாட்டு மக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் சிரமதான இயக்கங்கள் பெரிதும் உதவுவதைப் பாராட்டாதிருக்க முடியாது."

இவ்வாறு தேசியசேவை விளையாட்டுத்துறை உதவி அமைச்சர் திரு. டி.பி.வெலகெதர புலோலிமேற்கு வீரபத்திரர் ஆலய முன்றிலில் பொதுக்கிணறு வெட்டும் சிரமதானப் பணியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. எஸ். குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் உதவியமைச்சர் தொடர்ந்து பேசும்போது இந்தநாட்டின் முன்னேற்றம் இன மத வேறுபாடற்றஐக்கியத்திலே தான் பெரிதும் தங்கிஉள்ள தென்பதை தேசிய அரசாங்கம் உணர்ந்து செயலாற்றுகிறது என்றார். இந்த முயற்சியில் தேசீய அரசாங்கம் வெற்றியும் கண்டுவருகிறது என்று அவர் சொன்னார்.

உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு சிவசிதம்பரம்உதவி அமைச்சருடன் தாமும்சேர்ந்து மண்வெட்டிச் சிரமதானத்தில் கலந்துகொண்டார்.

# எம். பி. யின் அபிப்பிராயம்

தெகியோவித்த, புதன்

நல்ல நிலையற்றதெனக் கருதப்படும் காரை வைத்திருக்கும் எம். பி. தமது சொந்தப் பாவிப்புக்கென ஒரு காரை இறக்குமதி செய்வதற்கு பெர்மிட்டுகள் வழங்கப்படவேண்டுமென சமசமாஜக்கட்சி அங்கத்தவரும் தெகியோவித்த எம். பி. யுமான திரு. டி. பி. ஆர். வீரசேகரா அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

நல்ல வாகன வசதியில்லாததால் எம். பி. ஒருவர் தனது தொகுதிக்குச்செய்ய வேண்டிய கடமையைச் செய்யமுடியாமலிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

## அபிஷேக சந்தனம்

கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்

கிடைக்குமிடம்:

## சுந்தரம் பிறதர்ஸ்

(மருந்துச்சரக்கு வியாபாரம்)

73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்



# நல்ல காலம் வருகுது! நல்ல காலம் வருகுது!




## உங்கள் வீடு தேடிவரும் சன்லைட் மங்கையிடம்

## 10/- ரூபாய் பரிசு பெறுங்கள்!

இலகுவாக நீங்கள் 10/- ரூபாய் பரிசு பெற இதோ ஒரு சந்தர்ப்பம்!

மேலே படத்தில் காணப்படுபவர் போன்ற ஒரு சன்லைட் மங்கை, ஏப்ரல் 28ம் தேதிக்கும் 30ம் தேதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு விஜயம் செய்வார். அவர் விஜயம் செய்யும் வீடு தோறும், உங்கள் தகுதியை ஆராய்ந்து பத்து ரூபாய் வீதம் பரிசுகளை வழங்குவார்.

பத்து ரூபாய் பரிசுக்குத் தகுதி பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்:

உங்கள் வீட்டில் இரண்டு கட்டி சன்லைட் வைத்திருங்கள். ஒன்று பாவனையிலும் ஒன்று புதிதாகவும் இருக்க வேண்டும். இரண்டுகட்டிகளையும் சன்லைட் மங்கையிடம் காட்டுங்கள். "நீங்கள் ஏன் சன்லைட் உபயோகிக்கிறீர்கள்?" என்று அவர் கேட்பார்.

"சன்லைட் தருவது மேலும் பிரகாச சலவை; அத்துடன் சன்லைட்டினால் ஒரு உடையைச் சலவை செய்யும் செலவு, ஒரு சதத்திலும் குறைவு" என்று சரியாகப் பதில் கூறுங்கள். இந்தச்சரியான விடையைக் கூறினால் உடனே அவர் உங்களுக்கு10/-ரூபாய் பரிசு கொடுப்பார்.

இந்தப் பரிசுத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் செல்லுபடியாகும்.

உங்கள் சலவை வேலைகள் அனைத்தையும், வீட்டில் சன்லைட்டினால் செய்து, சுத்தமான பிரகாசமான ஆடைகளை அணியுங்கள். கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த சிறந்த பெறுமதி தருவது சன்லைட்.

## சன்லைட் மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது- வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்




JWT/S/4x56 (P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கலைஞர்களைக் கௌரவிக்கவேண்டும்'

மீசாலை, புதன்

சிற்பம், நாடகம், இசை போன்ற உன்னத கலைகள்தான் இன்றும் எமது நாகரீகத்தையும் பண்பாட்டையும் அகில உலகத்திற்கும் எடுத்துக் காட்டுகின்றன. ஆகவே இவ்விழாவில் நாம் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். இவ்வாறு தருமபுரம் பாடசாலை முன்றலில் நடைபெற்ற நாடகவிழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய கரைச்சிக் கிராம சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி கூறினார். கிராமசேவகர் திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு க. சங்கரப்பிள்ளை பாராட்டுரை வழங்கினார். "இதுதான் உலகம்" "அசட்டு வேலைக்காரன்" "சந்தேகம்" என்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. பிரதம பாகமேற்று நடித்த திரு. ஆர். ரி. சுப்பிரமணியத்தின் நடிப்பை திரு. ஆனந்தசங்கரி பெரிதும் பாராட்டினார்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
PEDRO ARMENDARIZ
in
SONS OF THUNDER
(Techni Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45க்கு மட்டும்
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி
கலரி 50 சதம்.

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை

# யாழ்ப்பாண வரலாறு.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மணற்றிடற் காட்டை எல்லாள மன்னன் ஈய்ந்தான் என்பர் யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

யாழ்ப்பாடி காரணமாக யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்தமைக்கு இக்கதைகள் ஆதாரமாகலாம் என்று கொள்ளப்படுகிறது.

வண. ஞானப்பிரகாச சுவாமிகள் அந்நாட்டின் யாழ்ப்பாணர் என்ற பாணர் வகையினர் வாழ்ந்தமையால் அது யாழ்ப்பாணமென்ருயிற்று எனல் சானுமென்பர்.

குபேரன், இராவணன் ஆகியோர் காலந்தொட்டே ஈழம் யாழிசைக்குப் பெயர் பெற்றிருந்தது. ஆதலால் அதன் பண்டைப் பெருமைக்கேற்ப, அப்பகுதியை ஆண்ட அரசர்கள் அதற்கு யாழ்ப்பாணமெனப் பெயரிட்டனர் என எஸ். குமாரசுவாமி கூறுவர்.

15ம், 16ம் நூற்ருண்டுகளிலே தலைநகராயிருந்த நல்லூர் என்ற ஊர்ப் பெயரில் சிங்கள மொழிபெயர்ப்பாகிய 'யாப்பனே' என்ற சொல்லே யாழ்ப்பாணம் என்ருயிற்று என்பர் முதலியார் ஏ. எம். குணசேகரா.

யாழ்ப்பாணத்தைக் குறிக்கும் 'யாப்ப பட்டுன' என்ற சிங்களப் பெயர், யாவுகர் இறங்குதுறை என்பதைக் குறிக்குமென்றும் யாவுகர் சேனை அங்கு வந்திறங்கியதால் அதற்கு அப்பெயர் வந்ததென்றும், அச்சிங்களப் பெயரிலிருந்தே யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்ததென்றும் நாட்டுவர் கலாநிதி எஸ். பறனவிதானே.

இவற்றை ஆராயுமிடத்து யாழ்ப்பாணப் பட்டினம் என்ற பெயரிலிருந்தே யாப்பா பட்டுன வந்ததன்றி யாவுகர் சம்பந்தமாயன்றென ஆங்கிலக் கட்டுரையிற் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறே ஏனைய கொள்கைகளிலுள்ள தவறுகள் எடுத்துக் காட்டப்பட்டு வையா பாடலிற் கூறப்பட்ட 'யாழ்வாசினை புரிவோன் முதலரசு நிறுவிய காரணத்தால் யாழ்ப்பாணமாயிற்றெனவும் வையா பாடற் கூற்று ஆதாரபூர்வமானதெனவும் ஆங்கிலக்கட்டுரையில் ஆராய்ந்து காட்டப்பட்டுள்ளது.

## தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கைப் பிரதிநிதிகள் விபரம்

மலேசியா தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள இலங்கைப் பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் வருமாறு:

திருமதி புனிதவதி திருச்செல்வம், ஸ்தலஸ்தாபன அமைச்சரின் துணைவியார். எச். டபிள்யூ. தம்பையா, இலங்கை சுப்ரீம் கோர்ட் நீதிபதி, உலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைத் தலைவர். என். நடராசா, வழக்கறிஞர். வி. கணபதிப்பிள்ளை, சதாம் ஹவுஸ் லிமிடெட் இயக்குநர். எஸ். வித்தியானந்தன், இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர். வி. கே. சிவப்பிரகாசம், கொழும்பு ஸாஹிராக்கல்லூரித் துணை ஆசிரியர், நாவலர் மண்டப பகுதி நேர விரிவுரையாளர். அபுபக்கர் முகம்மது அப்துல் அஸீஸ், இலங்கை அரசாங்க வேலை நியமனக்குழு உறுப்பினர். ஆர். சிவலிங்கம், இலங்கை ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபர் தம்மரத மேதி தேரோ, சரஸ்வதி பிரிவெனு விரிவுரையாளர். ஆ கனகரத்தினம், அரசாங்க ஆயுர்வேதக் கல்லூரி வெளிப் பரிசோதகர் (தனிப்பட்ட மருத்துவ ஆலோசகர்). வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல். கே. சி. தங்கராசா, உலகத் தமிழாராய்சி மன்ற இலங்கைக் கிளை நிதிக்குழுத் தலைவர். ஆர். சபாநாயகம், கொழும்பு விவேகானந்தா சங்கத்தலைவர். நா. சுப்பிரமணியம் ஜனப்பிரதிநிதிகள் சபை (சிங்களம், தமிழ்) உடன் மொழிபெயர்ப்பாளர். க. செல்வநாதன், தொழிலதிபர், உலகத் தமிழாராய்சி இலங்கைக் மன்ற கிளையின் நிதிக் குழுச் செயலாளர். பிஸ்ரீஸ்கந்தராஜா, இலங்கை சுப்ரீம்கோர்ட் நீதிபதி. கு. பாலசிங்கம், சுகாதார அமைச்சின் நிரந்தரச் செயலாளர். பஸ்தியாம்பிள்ளை, லண்டன் பல்கலைக்கழகத்தின் சரித்திர விரிவுரையாளர். கே. சிவதம்பி: ஜனப்பிரதிநிதிகள் சபை உடன்மொழி பெயர்ப்பாளர், தமிழ் விரிவுரையாளர். ஆ. விமலச்சந்திரா, கொழும்பு அமெரிக்க தகவல் இலாகாவின் தமிழ்ச் செய்தி ஆசிரியர். கே. எஸ். நடராசா, தமிழ் நிகழ்ச்சி அதிகாரி. குல. சபாநாதன், தகவல் ஒலிபரப்பு இலாகா தலைமைத் தமிழ் மொழிபெயர்ப்பாளர். கா. குலரத்தினம், இலங்கை பல்கலைக்கழக நிலைநூல் இலாகா தலைவர், பேராசிரியர். டாக்டர் பண்டிதரத்தினு இலங்கை பல்கலைக்கழக சீனியர் விரிவுரையாளர். எஸ். செல்வநாயகம், அரசாங்க பாடப்புத்தகக் குழுவின் பல்கலைக்கழக ஆலோசகர். எஸ். தனஞ்செயராசசிங்கம்: இலங்கை பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர். டாக்டர் ஜெயரத்தினம் வில்சன், இலங்கை பல்கலைக்கழக அரசியல் பொருளாதாரத்துறை விரிவுரையாளர். திருமதி கௌரி [illegible] இலங்கைத் தமிழ்ப் பெண்கள் சங்கச் செயலாளர். திரு டீ. பி

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

## புதிய நியமனம்

மீசாலை, செவ்.

கரைச்சிக் கிராம சங்கம் டக்ரர் எஸ். வி. மூர்த்தியையும், டக்ரர் எஸ். வி. மாசிலாமணியையும் முறையே வட்டக்கச்சிக்கும், உருத்திரபுரத்திற்கும் ஆயுள்வேத வைத்தியர்களாக நியமித்துள்ளது.

## ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தினமே விடப்படுவதாயும்' இதுபற்றி இந்து, பௌத்த தலைவர்கள் ஒன்றுகூடிப் பேசினல் இரு சமூகத்தவருக்கும் பயனுள்ளமுறையில் இதைச் செய்யலாமென்றும் கருத்துச்சொன்னர். இது மிக முக்கியமான விஷயம். இந்துக் குருமார்களையும் கலந்துகொண்டு இவ்விடு முறைகளை நிர்ணயிப்பது நல்லது. மாவிட்டபுரம் குருக்கள் கூறிய இந்த யோசனை பற்றி, மகா நாயக்கதேரோ ஒருகருத்தும் தெரிவிக்கவில்லை. ஒருவேளை குருக்கள் தமிழில் கூறியது அவருக்குத் தெரியாமலிருக்கலாம். இதைப் பற்றி நேரில் இருதரப்பினரும் கலந்து பேசினல், இரு சமூகத்தவர்களுக்கும் பயனுள்ள முறையில் இவ்விடு முறைகளை விட்டு, இரு சமூகங்களிடையேயும் நல்லுறவும், ஒத்துழைப்பும், அபிமானமும் பலப்படும்படி செய்யமுடியும். வருஷப் பிறப்பு முதலிய பல விஷயங்களிலும் இந்து அனுஷ்டானங்களையே இங்கு பௌத்தர்களும் வெகுவாகப் பின்பற்றுவதால், போயா விரத நாட்களை இருதரப்பினருக்கும் திருப்தியான முறையில் பொதுவாக நிர்ணயிப்பது கடினமாக இருக்க முடியாதல்லவா?

ஃ ஃ ஃ

தேடிக் கண்டுகொண்டேன்-திருமாலொடுநான்
முகனும்- தேடித்தேடாரைத் தேவனை என்
னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்.

—அப்பர் சுவாமிகள்

## சமய சமூக. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் ஆன்மீகமேன்மைக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் சமய சமூக ஐக்கியம்அவசியம் என்பதை நான் வலியுறுத்த வேண்டியதில்லை யென நினைக்கின்றேன்."

ராஜாங்க மந்திரியும் பதில் பிரதமருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அனுப்பிய இச்செய்திதபால் சுணக்கம் காரணமாக நேற்றுத்தான் எமக்குக் கிடைத்தது. சர்வசமயசம் மேளன மலரில் இது இடம் பெற முடியாது போய்விட்டது. ஆ-ர்.

இரத்தினம், கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர். டாக்டர் டேவிட், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மொழிப்பிரிவுத் தலைவர்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

(சங்கீதக் கருவி) முழுஅளவுள்ள ருத்திரவீணை விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ளது. அனேகமாக புதியது! கூடிய விலை தருபவருக்கு விற்கப்படும். மனேஜர் குவாட்டேஸில் பார்வையிடலாம். இலங்கை வங்கி, யாழ்ப்பாணம். 246

புளியங்குளத்திற்கு அருகாமையிலுள்ள அரிசி மில்லில் C. E. 9614, 10—4 சொந்தப் பாவிப்பிலுள்ள கார் விற்பனைக்குண்டு, 248

### வீடுதி

மாணவர் (ஆண்கள்)களுக்கு சென்ற்ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென்ற் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் அருகாமையில் விடுதி வசதி உள்ளது. தொடர்பு கொள்ளவும் செயின்ற்மேரீஸ் ஹாஸ்டல், 157, குருசேவ் வீதி, யாழ்ப்பாணம். 247

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் மார்க்கெட்டில் திரு. ஓ. அண்ணமலை கூப்பன் புத்தகமொன்று கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பிரதமர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1966-ம் ஆண்டிலும் நாட்டிற்கு கணிசமான உதவி அவசியம் என அவர் கூறினர்.

மேற்கு ஜெர்மனியில் அதிபர், பிரதமர் எர்ஹாட், நிதிமந்திரி ஆகியோருடன் பிரதமர் பேச்சு நடத்தினர். ஜெர்மன் ஐக்கியம்பற்றிய இலங்கையின் கொள்கைகளை அவர் அந்நாட்டுத் தலைவர்களுக்கு விளக்கினர்.

பிரான்ஸில் அதிபர் டி' காலுடன் அவர் நடத்திய பேச்சுக்களின் விளைவாக இலங்கைக்கு பிரெஞ்சு ஒத்துழைப்பும் உதவியும் வாக்களிக்கப்பட்டன.

லண்டனில் பிரதமர் வில்சன், மந்திரிகள் பொட்டம்லீ, திரு. ஆர்தர் கிரீன்வுட் ஆகியோருடன் பிரதமர் பேசினர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

போன்: 372 ருஜு ஸ்ரோர்ஸ் தந்தி: 'ருஜு'
இடமாற்றம்
2/B, ஸ்ரான்லி றேட்டிலுள்ள எங்கள் ஸ்தாபனம்
21 - 4 - 66 வியாழக்கிழமை தொடக்கம்
107, கஸ்தூரியார் வீதிக்கு
மாற்றப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.
புதிய விலாசம்:
ருஜு ஸ்ரோர்ஸ்
"ருஜு பில்டிங்"
107, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இரண்டு டாக்டர்களை நியமித்து உதவுக"

## ஊர்காவற்றுறை பட்டினசபை கோரிக்கை

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. வே. சிவசம்பு தலைமையில் இன்று மாலை நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் காலஞ்சென்ற முன்னாள் சட்டசபை சபாநாயகர் சேர் வை. துரைசாமியின் பிரிவு குறித்து பட்டினசபை அங்கத்தவர்கள் இரண்டு நிமிடம் அஞ்சலிசெலுத்தினர். சேர். வை. துரைசாமியின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

வேலணை மத்தியமகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் திரு. அல்வினஸ் ஆசிரியரை இடமாற்றம் செய்யவேண்டாம் என கல்விப்பகுதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இரண்டாம் வட்டார அங்கத்தவரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் டி. எம். ஏ. டாக்டர் இல்லை. டி. எம். ஓ. டாக்டரும் அதிகமாக ஆஸ்பத்திரியில் இருக்கமுடியாத நிலையும் ஏற்படுவதால் நோயாளர்கள் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். வாட்டுகளில் நோயாளர்கள் அதிகமாக இல்லை. டாக்டர்கள் இல்லாத குறைபாட்டால் இந்த நிலை ஏற்படுகிறது. இந்த ஆஸ்பத்திரிக்கு உடனடியாக இரு டாக்டர்களை நிரந்தரமாக நியமித்துத் தரவேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் திரு. எஸ். எம். அல்பிரட்டினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பட்டினப்பகுதிக்கு மக்களின் குடிதண்ணீர் வசதிக்காக செக்கோசெலவேக்கியா அளிக்கும் நன்கொடைப் பணத்தில் பத்துரியூப்கிணறுகள் அமைக்கவேண்டுமென அரசாங்க அதிபரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## அரசாங்க சேவையாளர்

### புதிய கார்கள் வாங்க அனுமதிக்கப்படுவர்

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையிலுள்ள உயர்தர உத்தியோகத்தர்களில் 1957 டிசம்பர் முதலாம் திகதிக்கு முன்பாக பதிவுசெய்யப்பட்ட சொந்தக் கார்களை வைத்திருப்பவர்கள் புதிதாக வாகனங்கள் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

அரசாங்க சேவையிலுள்ளவர்களில் பழைய கார்களை வைத்திருப்பவர்களில் யார் யார் புதிய கார்களை வாங்க இருக்கிறார்கள் என்ற பட்டியல் ஒன்றைத் தருமாறு திறைசேரி அரசாங்க தலைமை காரியாலயங்களிடம் கேட்டுள்ளது.

## காவலிலுள்ள . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் விடுதலைசெய்யப்பட்டுவிட்டதாகவும் காப்டன் வீரசிங்காவைத் துன்புறுத்துவதற்காகவே வைத்திருப்பதாகவும் போதிய உணவும் மற்றும் தேவைகளும் அளிக்கப்படவில்லையென்றும் அவரது உபயோகத்துக்கெனக் கொடுத்தனுப்பப்பட்ட உடைகளை காவல்புரியும் கடற்படையினர் திருப்பிக் கொடுத்துவிட்டனரென்றும் மனுவில் செல்வி சாந்தி தெரிவித்திருக்கிறார்.

## மத்திய வங்கியில் உள்ள குறைபாடுகள்

### தமிழ் எழுத்தாளர் மீண்டும் புகார்

கொழும்பு, புதன்

தமிழ் மொழி (விசேஷ விதிகள்) சட்டம் நிறைவேற்றப்பட்டு பல மாதங்கள் ஆகியும் மத்திய வங்கியில் இன்னும் குறைபாடுகள் இருந்துவருகின்றன. கடிதங்களுக்குப் பல மாதங்களாக பதில் அனுப்பப்படாமல் இருக்கின்றது. தமிழ் கடிதங்களுக்கு சிங்களத்தில் பதில் அனுப்பப்படுகின்றது. கடித உறைகளில் சிங்களத்தில் முகவரி எழுதப்படுவதால் அவை எங்கிருந்து எவரால் எழுதப்படுகின்றது என்பதைக் கூட தமிழ் மக்களால் அறிந்து கொள்ள முடிவதில்லை. எனவே இந்தக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்கண்டவாறு தமிழ் எழுத்தாளர் மன்றம் மத்திய வங்கி ஆட்சியாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மன்றத்தின் தலைவர் திரு. கா. பொ. இரத்தினமும், காரியதரிசி திரு. இ. ரங்கராப்பிள்ளையும் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

## ஜயவிக்கிரமா இன்று வருகிறார்

கொள்ளுப்பிட்டி, புதன்

வெளிநாடு சென்றிருந்த தபால் தந்தி மந்திரி திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா நாளை வியாழக்கிழமை நாடு திரும்புகிறார்.

## எப்பிரச்னைக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு மகாநாயக தேரோவிடம் கேட்கப்பட்டபோது அவர் தாம் கொழும்பு திரும்பியதும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுடன் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தி இதற்கான முயற்சி மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

மருதனமடம் கிறீஸ்தவ ஆச்சிரமத்தில் மகாநாயக தேரோவை வரவேற்றுப் பேசிய சங். சகோதரர் செல்வரத்தினம் மகாநாயக தேரோவின் வடபகுதி விஜயம் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே கருத்துவேறுபாடுகளை நீக்கப் பெரிதும் வழிவகுக்கும் எனத் தெரிவித்து அவரது வருகை பெருநன்மை ஏற்படுத்துமெனத் தாம் நம்புவதாகக் கூறினார்.

சர்வசமய காங்கிரஸ் சகல மதத்தவர்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்த வழிகோலுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

மகாநாயகதேரோ நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கு அவருக்கு ஸ்ரீலஸ்ரீ கைலாசநாதக் குருக்களால் காளாஞ்சி கொடுக்கப்பட்டது. விசேஷ பூஜையும் நடத்தப்பட்டது.

இதன்பின்னர் மகாநாயக தேரோ யாழ்ப்பாணம் நாகவிகாரைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு விசேஷதானம் வழங்கப்பட்டது. (ந. நி)

*திவிசாரணை மரணம்*

## தற்கொலை என தீர்ப்பு

கொள்ளுப்பிட்டி, புதன்

பெப்ரவரி சதிமுயற்சி சம்பந்தமாக இரகசியப் பொலிசாரினால் விசாரணை செய்வதற்கு புதிய அரசாங்க செயலக கட்டடத்தின் நான்காவது மாடியிலுள்ள இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குக் கொண்டுவரப்பட்டு மாடியிலிருந்து விழுந்து மாண்ட இரத்தினபுரியைச் சேர்ந்த தொடம்பே முதலாளி, இலங்கை காலாட்படைச் சேர்ந்த கோப்பரல் திலகரத்தின ஆகியோரின் மரணம் பற்றி விசாரணை செய்த கொழும்பு மாஜிஸ்டிரேட் திரு. வின்சென்ட் சுவரிஞதிபத் இருவரும் தற்கொலை செய்ததாக இன்று தீர்ப்பளித்தார்.

## 'தொழில் மந்திரி நடவடிக்கை எடுக்கவேண்டும்'

காலி, புதன்

'தொழிலாளர்களை ஏமாற்றும் முதலாளிகள் மீது தொழில் மந்திரி கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்விதம் நடவடிக்கை எடுக்காவிடில் தேசிய அரசாங்கத்தின் நல்ல பெயருக்குப் பங்கம் ஏற்பட்டுவிடும்"

இவ்வாறு தென்மாகாண தோட்ட முதலாளிமார் சங்கத் தலைவர் திரு. எஸ். எஸ். பெரேரா மேற்படி சங்கத்தின் 66-வது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சில தோட்ட முதலாளிமார் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய சலுகைகளை வழங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## இசை ஆசிரியர் புத்தூக்க வகுப்பு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வியா,

இசை ஆசிரியர்களுக்கான புத்தூக்க வகுப்பு ஆரம்பிக்கப்படுவதையொட்டி யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் வரும் திங்கள் செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் விரிவுரைகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். செவ்வாய்க்கிழமை வட்டார வித்தியாதரிசி திரு. என். ஆர். பாலசிங்கம் தலைமையிலும், புதன்கிழமை இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையிலும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

## இஸ்லாம், கிறிஸ்தவ, சமய பாடங்கள் 2300 பாடசாலைகளில் இல்லை!

கொழும்பு, புதன்

எல்லாப் பாடசாலைகளிலும் சமய பாடம் கட்டாய பாடங்களில் ஒன்றாக இருந்தும், சுமார் 2300 அரசாங்கப் பாடசாலைகளில் இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமய பாடங்கள் கற்பிக்கப்படுவதில்லை எனத் தெரியவருகிறது. இந்தச் சமயத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறைந்தளவிலேயே இருப்பதனால் இந்தச் சமய பாடங்களைக் கற்பிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நாட்டின்

# பொருளாதார முன்னேற்றத்துக்கு சமய ஒற்றுமை அவசியம்

## சர்வசமய மகாநாட்டில் மகாநாயக்கதேரோ

யாழ்ப்பாணம், வியா.

"நாட்டின் முன்னேற்றத்துக்கு ஏற்றவகையில் மக்கள் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். வரவுக்கு ஏற்ற முறையில் செலவிடாது, திட்டமெதுவுமின்றி தீய பழக்கங்களுக்கு அடிமையா, கடனாளியாக்கும் மனிதர்களைத்தான் நம் நாட்டில் சந்திக்கமுடிகிறது. இதன் விளைவுதான் நாடு பொருளாதாரத்துறையில் பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது"

யாழ். நகரமண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற சர்வசமயசம்மேளன 2-வது மகாநாட்டிற்குத்தலைமைதாங்கிய மல்வத்தை பீடத்தின் அதிபதி மகாநாயக்கா தேரோ அவர்கள் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேரோ அவர்கள் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது நாட்டுக்கு வந்தவர்களையெல்லாம் வரவேற்று விருந்தோம்பும் பண்புடைய பல, இன, மத மக்கள் தத்தமக்கென உரிய மதகலாச்சாரம் பண்புகளுடன் சிநேகமாக ஒற்றுமையாக கடந்தகாலத்தில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நாடும் பொருளாதார கஷ்டமோ, மத, இன பூசல்களோ இன்றி சுபீட்சமாக முன்னேறி வந்தது. முன்னேற்றம் தற்போது எமது நாட்டில் இல்லை. இதற்கு முக்கிய மூலகாரணம், எம்மவரிடையே உள்வளர்ச்சியின்றி வெளிவளர்ச்சி மாத்திரம் சமயவிவகாரங்களில் ஏற்பட்டதே அடிப்படையான காரணமாகும்.

எமது நாடு பொருளாதாரத்துறையில் எவ்வளவோ முன்னேறவேண்டியுள்ளது. இதற்கு பல இன, மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுசேராமல் ஒற்றுமைப்படாமல் இருந்தும், அதனால் பொருளாதாரநிலைமை சீர்குலைந்ததென்பது உண்மைதான்.

## சமயங்களுக்கு . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சமாதானமாக வாழவேண்டும் என்பதே மதங்களின் நோக்கமாகும். ஒவ்வொரு மதமும், சமாதானத்தையும், அன்பையும், ஒற்றுமையையுமே போதிக்கின்றது. முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவனென்ற முறையில் 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே முஸ்லிம்கள் சமாதானத்தைப் பின்பற்றியுள்ளார்கள். எமது முன்னோர்கள் இங்கு வியாபாரம் செய்வதற்கு, வியாபாரிகளாகவே வந்தார்கள். ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் வந்த அவர்கள் இங்கு உள்நாட்டு மங்கையர்களை மணம்புரிந்தார்கள். காணிகள் சொந்தமாகப் பெற்று இங்கு குடியேறினார்கள். அதுமட்டுமின்றி பல இடங்களிலும் 'மொஸ்க்' நிறுவினார்கள்.

கட்டாயப்படுத்தியோ, நிர்ப்பந்தப்படுத்தியோ சிங்கள மக்கள் இவற்றை நமக்குத்தரவில்லை. சமாதான ஒத்துழைப்பின் மூலமே தந்தார்கள். இலங்கையை பிடிக்கும் எண்ணத்துடன் முஸ்லிம்கள் வரவில்லை. வியாபாரிகளாகவே வந்தனர்.

யாழ் கிளை காரியதரிசி திரு. டி. ஆர். குணசேகரம் யாழ். கிளை உபதலைவர் திரு. எம். எம். அப்துல்காதர் ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள்.

சைவசமய காவலர் திரு. முத்துசாமிப்பிள்ளை கூறியதாவது;- கடைசியில் நம்மைப் பற்றித் தொடருவது பாவபுண்ணியமே என்கிறது சைவசமயம். நாம் செய்த பாவபுண்ணியத்தை நாம் அனுபவித்தே தீரவேண்டும். எல்லா மதத்தவர்களும் ஒன்றுகூடி சமாதானமாக இருக்கவேண்டும்.

சர்வசமய காங்கிரஸ் தலைவர் திரு டி எல். எப்-பேதிரிஸ் கூறியதாவது:- எல்லாச்சமயத்தவர்களுக்கும் சமசந்தர்ப்பம், சம உரிமை வழங்கப்படவேண்டியது அவசியம். இதுவே இச் சம்மேளனத்தின் முக்கிய நோக்கம். ஒருவர் உரிமையில் மற்றவர்கள் தலையிடாத நிலை உருவாகினால் சமாதானம் நிலைத்து நிற்கும். சமுகஒற்றுமையை ஏற்படுத்தி அதன்மூலம் சமாதானத்தை நிலைநாட்டவேண்டும்.

மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த அத்துறுகுறு நாயக்கதேரோ கூறியதாவது: 2500 வருடங்களுக்கு முன், புத்தர்பெருமான், ஏப்ரல் மாதம் அமாவாசை தினத்தன்று இங்கு வந்ததாக கூறப்படுகிறது. அதேபோல் மல்வத்தை சுவாமியும், ஏப்ரல் மாதம், இங்கு வருகை தந்துள்ளார். எல்லோரையும் சமமாக மதிக்கும் ஒருவர், மற்றவர்களுடன் நேசமாக இருப்பார்.

யாழ்ப்பாண பிஷப் எமிலியானுப்பிள்ளை கூறியதாவது;- சமய ஒற்றுமைக்காக கூடப்படும் இம் மகாநாட்டில் கலந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பண்டையகாலம் முதல் இன்றுவரை இலங்கையில் பல்வேறு சமயத்தவரும் ஒற்றுமையாகவும் அன்பாகவும் வாழ்ந்துவருகிறார்கள். மக்களுக்குள்ளும், சமயத்திற்குள்ளும் எவ்வித வித்தியாசமும் பாராட்டாது, எல்லோரும் சகோதரர்களாக வாழவேண்டும்.

கொழும்பு ஆங்கில தேவாலயத்தைச் சேர்ந்த ஹர்ல் டீ சொய்சா கூறியதாவது: நாங்கள் எதிர்பார்க்கும், ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டவேண்டும் என்பதே இச் சம்மேளனத்தின் நோக்கமாகும். இச்சம்மேளனம் உருவானது, இந்நாட்டிற்கு கிடைத்த நன்மையே

சர்வசமய காங்கிரஸ் யாழ்ப்பாண கிளைத்தலைவர் திரு. சி தனபாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மகாநாட்டிற்கு அனுப்பியிருந்த வாழ்த்து செய்தியும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அனுப்பியிருந்த செய்தியும் படிக்கப்பட்டது.

ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வாழ்த்துச்செய்தியும் கொழும்பு அதிமேற்றிராணி தோமஸ்குரேயின் வாழ்த்துச்செய்தியும் படிக்கப்பட்டது. யாழ். கிளை கூட்டுக்காரியதரிசி திரு. எஸ். ஸ்ரீனிவாசன் நன்றியுரை கூறினார்.

## அஞ்சல்

கொள்ளுப்பிட்டி, புதன்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செல்துள்ள மல்வத்தை மகாநாயகதேரோவுக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளை அஞ்சல்செய்ததில் இலங்கை வானொலியில் ஏற்பட்ட சில தவறுகளைப் பற்றிஇன்று பதில் வானொலி டைரக்டர் ஜெனரல் திரு. எரிக் அலுவிகாராவிசாரணை செம்வார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் கம்பனியாருக்காக அவர்களால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதியிலுள்ள இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org